பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 19 புதன்கிழமை (03-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 38

# கொழும்பு நகர பகுதியில் நேற்று முதல் அதிதீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

## புலிகள் தாக்கலாம் என்று அச்சம்

கொழும்பு, ஜனவரி 3

புலிகள் தாக்குதல் நடத்தலா ம்என்ற அச்சம் காரணமாக கொழும்பில் நேற்று தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை தற்காலிக ஏற்பாடுகளாகக் கருதமுடியாது என்று பி. பி. ஸி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலகம். பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகம் அமைந்துள்ள காலி முகத்திடல் பகுதி —

காலிமுகத் திடலில் இருந்து கொள்ளுப்பிட்டி அலரி மாளிகை வரையிலான வீதி— ஆகியவையே நேற்று கடுமையானபாதுகாப்பு நடவடிக்கைக்கு உள்ளாகின,

இதன் காரணமாக இப்பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. இந்நிலை தொடருமானால் தாம் வர்த்தகநிலையங்களை மூட வேண்டி ஏற்படும் என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

புலிகளின் தாக்குதலுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில் நிலைகொண் படையினர் மீது புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 3

மாதகல் பகுதியில் இருந்து முன்னேறி வந்து பொன்னாலை கிருஷ்ணன் கோயிலடியில் தரித்து நின்ற இராணுவத்தினரின் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இத் தாக்குதல் நடத்தப்பட்டது:

இராணுவத்தினர் இதற்கு முதல் நாளே இப்பகுதிக்கு வந்து நிலை கொண்டிருந்தனர்,

தாக்குதல் தொடர்பான சேத விவரங்கள் கிடைக்கவில்லை. (இ-3]

## தெற்கே செல்வோரை தங்கவைக்க வவுனியாவில் மற்றொரு முகாம்

### தினமும் 100 பேருக்கு மட்டுமே 'பாஸ்'

வவுனியா, ஜன. 3

வடக்கில் இருந்து தெற்கே செல்வதற்காக வவுனியா வருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதால் — பயணிகள் தங்க மேலும் ஒரு முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்பாக இயங்கி வந்த முகாமில் 314 குடும்பங்களைச் சேர்ந்த 413 பேர் தங்கியுள்ளனர்.

புதிதாக சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் 418 குடும்பங்களைச் சேர்ந்த 645 பேர் தங்கியுள்ளனர்.

வடக்கில் இருந்து வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பதால் முகாம் பராமரிப்பு பணி மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமும் 250 பேர் வரையில் வவுனியா வருவதாகவும் —

படையினர் 100 பே'ரை மட்டுமே தெற்கே செல்ல அனுமதிப்பதாலேயே நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## தொண்டா - சந்திரசேகரன் கட்சிகள் பொ.ஐ.முவின் கீழ் போட்டியிட முடிவு

கொழும்பு, ஜன. 3

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின்போது அமைச்சர் தொண்டமானும் பிரதி அமைச்சர் சந்திரசேகரனும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

இப்படி கிராம அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திசநாயகா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றுள்ள அரசியல்கட்சிகளுக்கிடையே போட்டியைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே பொதுச் சின்னத்தில் போட்டியிட இணக்கம் ஏற்பட்டதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த தேர்தலில் அமைச்சர் தொண்டமானின் இ. தொ. காங்கிரஸ் ஐ. தே. கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து சேவல் சின்னத்தில் போட்டியிட்டது.

சந்திரசேகரன் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

கடந்த தர்தலில் இருதுருவங்களாகச் செயற்பட்ட இந்த இரு தலைவர்களும் தற்போது ஓரணியில் நிற்பது தெரிந்ததே.

அதேசமயம் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் மலைநாட்டில் உள்ள ஏனைய தமிழ்பேசும் தொழிற் சங்கங்களும் ஒன்றிணைவது தொடர்பாக தற்போது பேச் [illegible]

(இ-10)

## நல்லூர் கோயில் உள்ள இடத்தில் முன்பு விகாரை!

### சிங்கள பேராசிரிய கூறுகிறார்

கொழும்பு, ஜன. 3

பழைமையான பௌத்த வணக்க ஸ்தலம் ஒன்று இருந்த இடத்திலேயே நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டிருக்கின்றது.

சிங்களப் பேராசிரியரான அபேய ஆரியசிங்க என்பவர் இவ்வாறு தெரிவித்திருப்பதாக ''த சண்டே ஐலண்ட்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

இது தொடர்பாக பேரசிரியர் அபேய ஆரியசிங்க ''நல்லூர் கோயிலின் சரித்திரம்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்றை ''த சண்டே ஐலண்ட்'' பத்திரிகை பிரசுரித்திருக்கின்றது.

அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம் வருமாறு:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சிப்பாய் பலி

சாவகச்சேரி, டிச. 3

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் உள்ள ஊறணியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இராணுவ அவதான நிலையம் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் மற்றொருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

(இ-3)

## மர்மவிமானம் புலிகளுக்கே ஆயுதம் ஏற்றி வந்தது!

### இப்படி நம்புகிறது புலனாய்வுப்பிரிவு

மேற்கு வாங்காளம் புரூலியா மாவட்டத்தில் பரசூட் மூலம் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் போட்ட விமானம், விடுதலைப் புலிகளுக்கே ஆயுதங்களை ஏற்றி வந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் மத்திய புலனாய்வுப் பிரிவினர் பெரும்பாலும் இவ்வாறு நம்பும் நிலைக்கு வந்த்ருக்கின்றனர்.

கடந்த ஞாயிறு வெளியான பி. ரி. ஐ. செய்தி ஒன்றை மேற்கே ள்காட்டி ரூபவாஹினி இவ்வாறு அறிவித்தது.

[உ]

## திரவப் பணத்துக்குத் தடை

### மீள்பரிசீலனை செய்ய வங்கித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 3

வடபகுதி வங்கிகளுக்குத் திரவப்பணம் அனுப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையை மீள் பரிசீலனை செய்யுமாறு—

இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள வங்கிகளுக்கு திரவப்பணம் எதனையும் அனுப்பக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த உத்தரவைத் தொடர்ந்தே வடபகுதிக்குத் திரவப்பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டது.

வடபகுதிக்குத் திரவப் பணத்தை அனுப்புவதை நிறுத்துவதனால் விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்த முடியும் என தாம் நம்புவதாக இராணுவ அதிகாரிகள் கூறியதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடபகுதியில் உள்ள வங்கிகளுக்குப் பணம் அனுப்பப்பட்டால் அது கொள்ளையடிக்கப்பட்டுவிடும் என்று வடபகுதி புனர்வாழ்வு வேலைகளுக்குப் பொறுப்பான பிரதம இணைப்பாளர் எஸ். எம். ஜே. சேனரத்ன கூறியதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வு யோசனைகளில் வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை

## தெரிவுக்குழுவே முடிவு செய்ய வேண்டுமாம்

கொழும்பு, ஜன. 3
இனப்பிரச்சினைக்குத் தீர்வு யோசனையாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அரசாங்கம் சமர்ப்பிக்கவிருக்கும் திட்டத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றியோ அதிகாரப் பரவலாக்கலைப் பெறும் நிர்வாக அலகு பற்றியோ எதுவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்க மாட்டாது.

வடக்கு - கிழக்கை இணைப்பதா? அதிகாரப் பரவலாக்கத்தைப் பெறும் நிர்வாக அலகு எது?— போன்ற விடயாங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை முற்று முழுதாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விட்டுவிடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள் காட்டி ஆங்கில வார இதழான "தசண்டேலீடர்" தனது தலைப்புச் செய்தியாக இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

"அரசின் யோசனைத் திட்டத்தில் இணைப்பு இல்லை" — என்ற தலைப்புடன் இச்செய்தி பிரசுரமாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து ஆட்சியிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ளேயே பலத்த கருத்து வேறுபாடு இருப்பதால், இந்த விடயத்தில் தான் பொறுப்பு எதனையும் ஏற்று சிக்கலை விலைக்கு வாங்குவதை விட, இப்பிரச்சினை பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பை தெரிவுக்குழுவின் தலையில் சுமத்தி விடுவதையே அரசு விரும்புவதாகத் தெரிகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஏற்கனவே வடக்கு - கிழக்கை இணைக்கும் திட்டத்தை எதிர்க்கப் போவதாகத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது என்பது தெரிந்ததே.

அரசில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்; கிழக்கிலிருந்து முஸ்லிம் பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம் நிர்வாக அலகு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

அரசுக்குள் இந்த விடயத்தில் இழுபறி இருப்பதாலும் —

வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரித்தால் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி வரும் என்பதாலும் —

இந்த விடயத்தில் முடிவு எடுக்கும் பொறுப்பை தெரிவுக்குழுவின் மேல் சுமத்த அரசு முடிவு செய்திருக்கின்றது. [உ]

### சர்வதேச நாணயச்சபை அதிருப்தி

கொழும்பு, ஜன. 3
இலங்கை அரசின் வரவு - செலவுத்திட்டத்தில் பெருந்தொகை துண்டுவிழுத்ததையிட்டு சர்வதேச நாணயச் சபை அதிருப்தி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இலங்கை துரிதமாக வளர்ச்சியடைய வேண்டுமானால் இனப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்றும அவர் கூறினார். (இ-3)

### தமிழ் - சிங்களம் போதிக்க 9,000 ஆசிரியர்

கொழும்பு, ஜன. 3
தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தையும், சிங்களப் பாடசாலைகளில் தமிழையும் போதிக்க 9 ஆயிரம் ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களில் 6 ஆயிரம் பேர் சிங்களப் பாடசாலைகளில் தமிழைப் போதிப்பர். 3 ஆயிரம் பேர் தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தைப் போதிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ)


## முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன*
*வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் சங்கம்*
*யாழ். பிராந்திய அலுவலகம்*

தயவுசெய்து சகல யாழ். பிராந்திய மட்டுப்படுத்தப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் தவறாது குறிப்பிட்ட திகதியில் ஒன்று கூடி தற்போதைய நிலைகள் குறித்து ஆலோசிக்க உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

**நேரம்: 10 - 01 - 1995**
**காலை: 10. 30 மணி**
**இடம்: இந்துக்கல்லூரி, சாவகச்சேரி**

வெளிக்கள உத்தியோகத்தர் சங்கம்
(39903)



## உடன் தேவை

வீட்டுத் தேவைக்கு நல்ல நிலையில் உள்ள அமெரிக்க தயாரிப்பான Solar Panel தேவை. அளவு 48 " X 18 " விரும்பத்தக்கது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு முகவரி:-
இ. சிவபாதசுந்தரம்
C/o சு. வினாசித்தம்பி
உசன்,
மிருசுவில். (39901)



## UNIVERSITY OF JAFFNA SRI LANKA.

To all members of the Faculty Board of the Faculty of Arts.

The meeting of the Faculty Board of the Faculty of Arts will be held on Wennesday, 10 - 01 - 1996 at 10. 00 a.m in the Library Room of the Chavakachecheri Hindu College.

Please be present.

PROF. P. BALASUNDARMPILLAI,
Dean, Faculty of Arts.
02. 01. 1996 (C/3010)



## விறகு வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

தென்மராட்சி, ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணியின் வரணி வடிசாலைக்கு விறகு வழங்கக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மா. ஆல். ஒதி தவிர்ந்த ஏனைய விறகின் தன்மைகளையும், வழங்கக் கூடிய ஒரு தூக்கு விறகின் விலை விவரத்தையும் குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர், ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி, வரணி" என்ற முகவரிக்கு எதிர்வரும் 13-01-96 திகதிக்கு முன்பாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தைமாதம் 16ஆம் திகதியிலிருந்து ஆடி மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் மொத்தமாக 3500 தூக்கு விறகு வழங்க வேண்டும்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி,
ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின்,
கொத்தணி, வரணி.
(39776) 01-01-96


### 6 நலன்புரி முகாம்கள் பராமரிப்பு

கிளிநொச்சி ஜன. 3
"சூரியப் பிரகாசம்" இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து தற்சமயம் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களை பூநகரி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் பராமரித்து வருகிறது.

இம் முகாம்களில் மொத்தம் 456 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 801 பேர் தங்கியுள்ளனர். இவர்களுக்கு மூன்று நேர உணவும் வழங்கப்பட்டு வருகின்றது. (இ 90)

### பாம்புதீண்டி மாணவன் மரணம்

மந்திகை, ஜன. 3
பாம்பினால் கடியுண்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கொடிகாமத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவற்துறையில் இருந்து இடம்பெயர்ந்த கனகராசா சுரேஷ்குமார் (வயது 16) என்பவரே மரணமானவராவார்.

இவர் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தின் ஜி. சி. ஈ சாதரணதர வகுப்பு மாணவராவார்.

கொடிகாமம் புகையிரத வீதிப் பகுதியில் அமைத்துள்ள தனது குடிசையில் படுத்திருந்த வேளை பாம்பினால் இவர் கடியுண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### காயமடைந்த உயரதிகாரி

கொழும்ப, ஜன. 3
மட்டக்களப்பு கல்லடியில் கடந்த சனியன்று நடந்த தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்தவர் மட்டக்களப்பு கமாண்டர் கேணல் ரஞ்சித் விதானகே என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியுமாவார்.

இவருடன் மற்றும் இரு இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர்.

இத்தாக்குதலில் ஒரு அதிகாரி காயமடைந்தார் என அரசு அறிவித்திருக்கிறது. (இ-3)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

**(நெல்லியடி, உடுப்பிட்டி உப-அலுவலகங்கள்)**
*1987 ஆம் ஆண்டின் 15 வது இலக்க*
*பிரதேச சபைகள் சட்டம்*

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1996 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிக்கான மதிப்பீடுகள் ஆதனவரி அறவீட்டு விகிதமும் இவ்வாண்டுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும். 1996 ஆம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுந்துவோரிற்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்ரல் 30, யூலை 31, ஒக்ரோபர் 31 க்கு முன்னர் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்கான வரி முறையே 31-3-96, 30-6-96, 30-9-96, 31-12-96 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத் தவறுமிடத்து குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக் கட்டணமாக 15% மும், வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% மும் அறவிடப்படும்.

இவ்வரி விதிப்புக்கு எதிரான முறைப்பாடுகளை 31-1-96 வரை சபைக்கு அறிவிக்கவும். ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. அதன் உரிமையாளர்களும் அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.
27-12-1995 [சி/3013]



## தேடப்படுகின்றார்

யாழ்ப்பாணம், அரியாலை,
16/1, முருகையா வீதியில் வசித்த

**திரு. இராசையா துஸ்யந்தன்**

என்பவரை உடன் சந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மைச் செயலகம்,
திருவையாறு.
(சி/2931)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதித்துறை அறிவித்தல்; வைப்பகத்துக்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை 4ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு விடுதலைப் புலிகளின் நிதித்துறை கேட்டுள்ளது.

★ தம்பையா கனகராசா பூமணி — உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ கே. மகாலிங்கம் — 224, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ க. மயில்வாகனம் — 31, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ திருமதி திருநாவுக்கரசு (கமலா) — 3/3, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ ஏ.ஈ. தியாகராஜா — சேச் லேன், தாவடி, கொக்குவில்.

செல்வி சிவசேனா — மே/பா. சி. என். ரங்கநாதன், பல்கலைக்கழக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

★ க. மனுவல் — 7/1, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ லோட்டன் ராஜ்குமார் — சங்குவேலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

★ சபாரட்ணம் விமலராயன் — சங்குவேலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

★ கந்தையா இரத்தினேஸ்வரன் — சங்குவேலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

★ அந்தோனிப்பிள்ளை மரிய தாஸ் (யோகம்) அல்லது மரியதாஸ் லூர்த்தநாயகி — 37, கொண்டடி றோட், குருநகர்.

★ செல்லத்துரை எட்மன் பீரிஸ் — இல. 3, முதலாம் குறுக்குத்தெரு, பாசையூர்.

★ எஸ்.எஸ். இரத்தினசபாபதி (யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்) — சிவலிங்கப்புளிபடி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். பரமேஸ்வரன் — 102, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ திருமதி ந. சரஸ்வதி — 102, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ திருமதி கனகாம்பிகை பத்மநாதன் — 9, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ எஸ். வாமதேவன் — 109, பெற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ சந்தானலட்சுமி தவராசா — 106, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

★ த கதிர்காமநாதன் — 21, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ செல்வி அனுசியா பாலகிருஷ்ணன் — மே/பா. மீனகாந்தி, புகையிரதநிலைய வீதி, மல்லாகம்.

★ பவளாவதி — மே/பா. செல்வநாயகம் (பஸ் வண்டி நடத்துனர்), நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

★ தேவிகாராணி யோகேஸ்வரன் — 50, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தையா முத்தையா — கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

★ புண்ணியமூர்த்தி சண்முகநாதன் — 19/1, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ பொன்னுத்துரை கதிர்காமநாதன் — வாம்பத்தரை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ நாகேந்திரா சிவபாதம் — கூடப்பாதை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ திருமதி. கனகம்மா நல்லையா — கொத்தியாவத்தை,, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

★ வைத்திலிங்கம் நடேசு — சுன்ணாகம் மேற்கு, சுன்னாகம்.

★ புண்ணியமூர்த்தி சண்முகநாதன் — 19/1, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ சின்னத்துரை பாஸ்கரன் அல்லது சின்னத்துரை சரஸ்வதி அல்லது சின்னத்துரை பாக்கியலட்சுமி — கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

★ கந்தையா மயில்வாகனம் — புளியடி வைரவர் கோயிலடி, உடுவில் தெற்கு, சுன்னாகம்.

★ இராசதுரை பாலசுந்தரம் — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

★ கனகசபை சிறீஸ்கந்தராசா — வலிவடக்கு, பிரதேசசபை உப அலுவலகம், காங்கேசந்துறை, மல்லாகம்.

★ புவனேஸ்வரி கதிர்காமு — பாரதிவீதி, பத்தைமேனி அச்சுவேலி.

★ சங்கரப்பிள்ளை சுந்தரம் — கம்பளை, தெல்லிப்பளை.

★ சீனிவாசன் நாகராசா — மே/பா ஆறுமுகம், எம். எஸ். ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ அப்புக்குட்டி முருகேசு — மயிலணி வடக்கு, சுன்னாகம்.

★ கணபதிப்பிள்ளை மார்க்கண்டு — இல 22/4, மூன்றாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ பரமேஸ்வரி சேனாதிராசா — வேதவனம், வட்டுவினி, இணுவில் மேற்கு, இணுவில்.

★ திருமதி சரஸ்வதி சின்னராசா — கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ ஆறுமுகம் விஸ்வலிங்கம் — 235, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ சுவாமிநாதர் நடராசா — மாரிசன் கூடல், இளவாலை.

★ சரஸ்வதி சுப்பிரமணியம் அல்லது செல்வமலர் அப்புத்துரை — சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.

★ தம்பிராசா சண்முகலிங்கம் — இல. 199, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

★ குமாரசாமி சத்தியசிவம் — ஏழாலை கிழக்கு, ஏழாலை.

★ மஞ்சுளாதேவி கனகராசா — உடுவில் தெற்கு, மானிப்பாய்.

★ கிருஸ்வவேணி ரட்ணராஜசிங்கம் அல்லது இலட்சுமி சீனியர் — நந்தாவில், கந்தரோடை வீதி, சுன்னாகம்.

★ திருமதி. நட்குணேஸ்வரி வரதராசா — 234/6, தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

★ கனகரெத்தினம் மகாதேவன் — மே/பா செல்லத்துரை மாஸ்ரர், மெய்கண்டான் மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.

★ திருமதி. அ. நகுலேஸ்வரி — பெரிய வளவு, கொடிகாமம்.

★ சி. இராமலிங்கம் — மே/பா சின்னையா சுப்பிரமணியம், மீசாலை தெற்கு, மீசாலை அல்லது பலாலிகிழக்கு, வசாவிளான்.

★ சாமுவேல் பீற்றர் — மே/பா எம். நவரட்ணம் சாவகச்சேரி பிரதேசசபை, நாவற்குழி, கைதடி.

★ சுப்பிரமணியம் மனோகரன் — மே/பா சுப்பிரமணியம் புவிராசசிங்கம், புதிய குடியிருப்புத்திட்டம், கெற்பலி கிளாலி, மிருசுவில்.

★ [illegible] — சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (இ)

# புலிகளின் ஆயுதங்கள் கப்பல் மூலம் வாகரைப் பகுதியில் இறக்கப்பட்டன!

## கொழும்பு வார இதழ் தகவல்

வெளிநாடுகளில் கொள்வனவு செய்த ஆயுதங்களைக் கப்பல் மூலம் ஈழத்துக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றியடைந்திருப்பதாக "த சண்டே லீடர்" பத்திரிகையில் பாதுகாப்பு நிலைமை பற்றிய கட்டுரையை வரையும் பாதுகாப்புச் செய்தியாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்

புலிகளுக்குரிய ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு துருக்கி நாட்டுத்துறைமுகம் ஒன்றிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் புறப்பட்ட கப்பல் ஒன்று ஒரு வாரத்துக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டம் வாகரையில் வெற்றிகரமாக ஆயுதங்களை இறக்கிவிட்டுச் சென்றிருக்கின்றது.

ஸ்ரீலங்கா கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஊடுருவி நுழைந்து இக்கப்பல் ஆயுதங்களை இறக்கி விட்டுச் சென்றிருப்பது பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடந்த பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட மாநாட்டில் கப்பல் ஊடுருவி நுழைந்து ஆயுதங்களை இறக்கியது குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது.

கடற்படைப் பீரங்கிப்படகுகள் மற்றும் கடற்கலங்களின் பற்றாக்குறை காரணமாக தங்களால் ரோந்து நடவடிக்கைகளைச் செய்வனே செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவித்துள்ள கடற்படையினர், நிலைமையைச் சீர் செய்ய அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் நெருங்கிய உறவினரான — மேற்கு நாட்டுத் தலைநகர் ஒன்றை தனது தளமாகக் கொண்ட - கப்பல் நிறுவன முகவர் ஒருவர் மூலமே விடுதலைப்புலிகள் இந்த விடயத்தில் இயங்குகின்றனர் என புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் —

மேற்கு வங்காளம் புரூலியா மாவட்டத்தில் மர்மமான முறையில் ஆயுதங்களைப் போட்ட விமானம் திடீரென சென்னை வந்து திரும்பியது குறித்தும் —

சென்னையில் வைத்து விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்கள் அந்த விமானத்திலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம்

கொழும்பு, ஜன. 3

அரச சேவையாளர்களுக்கு இந்த ஆண்டு விசேட முற்பணமாக ஆயிரம் ரூபா வழக்கப்பட விருக்கிறது.

இந்த முற்பணத்தை அரச சேவையாளர்கள் எதிர் வரும் பெப்ரவரி மாத இறுதிக்குள் பெறவேண்டும் என்றும் — தவணை அடிப்படையில் சிறுதொகை வட்டியுடன் அது அறவிடப்படும் என்றும் — அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தலை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல அமைச்சுகளுக்கும் விடுத்துள்ளது. (இ-3)

# சாவகச்சேரிப் பகுதியில் தண்ணீர் தாங்கிகள்

## செஞ்சிலுவைச்சங்கம் அமைக்கும்

தொன்மராட்சி, ஜன. 3

சாவகச்சேரி நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 15 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தாங்கிகளை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினர்சாவகச்சேரிநகரசபையின் உதவியுடன் அமைக்கவுள்ளனர்.

அதிகமாகமக்கள்தங்கிஉள்ள — உவர் நீர் உள்ள ஆறு இடங்களில் இந்த தண்ணீர்த் தாங்கள் அமைக்கப்படும்.

இந்த தாங்கிகளுக்கு யாழ். மாநகர சபை பவுஸர்கள் மூலம் தண்ணீர் விடப்படும்.

# இலவச ரயில், பஸ் பாஸ் வசதி

கொழும்பு, ஜன. 3

மத்திய மாகாணத்தில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் பஸ்களிலும், ரயில்களிலும் இலவசமாகப் பயணம் செய்வதற்கு பாஸ் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று மத்திய மாகாண சபையில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ)

# வடக்கு-கிழக்குப் பகுதியில் விசேட விவசாயத் திட்டம்

## அரசு செயற்படுத்துமாம்

கொழும்பு, ஜன. 3

வடக்கு - கிழக்குப் பகுதிகளை விவசாய முயற்சியில் முழுமையாக ஈடுபடுத்தக் கூடிய விசேட விவசாய திட்டம் ஒன்று விவசாய, காணி வள அமைச்சர் டி. எம். ஜெயரத்தினாவினால் செயற்படுத்தப்படவிருக்கிறது.

வடக்கே படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதி உட்பட சகல பகுதிகளிலும் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசளை, விதை தானியங்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் கடன் வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வடபகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை தலைநகர் கொழும்பு உட்பட ஏனைய பகுதிகளுக்கு கொண்டுவருவதில் இருந்து வரும் போக்குவரத்து கஷ்டங்களை நீக்க எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து நேற்று கொழும்பில் நடக்கவிருந்த கூட்டத்தில் ஆராயப்படவிருந்தது (இ-3)

# தபால் திணைக்களம் கூட்டுத்தாபனமாக மாறும்

தபால் திணைக்களம் இந்த வருட இறுதிக்குள் ஒரு கூட்டுத் தாபனமாக மாற்றப்படவுள்ளது.

தபாற் சேவையை சீராக மேற்கொள்வதும் அதனை இலாபமுள்ள ஒரு தொழில் முயற்சியாக நடத்துவதுமே இதன் நோக்கமாகும்.

தபாற் திணைக்களம் கூட்டுத் தாபனமாக மாறுவதால் ஊழியர்கள் எவரும் வேலையை இழக்க மாட்டார்கள் என்றும் தற்சமயம் வழங்கப்படும் சலுகைகளும் நிறுத்தப்படமாட்டா என்றும் இதற்கு மாறாக ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்றும் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார் (இ-10)

# காத்தான்குடியில் 5 மீனவர் பலி!

காத்தான்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் அகப்பட்டு ஐந்து மீனவர்கள் பலியாகி இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வாவிக்கு மீன் பிடிக்கச் சென்ற சமயமே மீனவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் — கொல்லப்பட்டவர்களில் மூவர் முஸ்லிம்கள், இருவர் தமிழர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

EN தொடர் இலக்க மொறிஸ் மைனர் கார் ஓடும் நிலையில் விற்பனைக்குண்டு. கைதடி கோப்பாய் வீதி, கைதடி மேற்கில் சு. சண்முகரத்தின சர்மாவுடன் தொடர்புகொள்ளவும். (39767)

8/3293 ஒக்ஸ்போட் கார் நீல நிறம் விற்பனைக்குண்டு. தொடர்பு S. யோகீஸ்வரன், டச்சு றோட், சாவகச்சேரி. (39891)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி, மாலைதீவு இனங்கள் விற்பனைக்குண்டு. மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. (39896)

### காணவில்லை

மோட்டார் சைக்கிள் C70-த2 7406 நீலநிற எக்னோ பவர் யந்திர இல. 6508466, அடிச்சட்ட இல. 6274269 28-12-95இல் கைதடி கோப்பாய் வீதி, கைதடி மேற்கில் வசிக்கும் எனது வீட்டிலிருந்து காணவில்லை. இது பற்றி தகவல் அறிந்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் சு. சண்முகரத்தின சர்மாவுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (39796)

### சைக்கிள் சேவை

தங்கள் பிள்ளைகளை துவிச்சக்கரவண்டியில் வீட்டிலிருந்து பாடசாலைக்கு குறித்த நேரத்தில் பாதுகாப்பாகக் கூட்டிச்செல்ல தொடர்புகொள்ளவேண்டிய முகவரி சி. சிவலிங்கம், 'அறிவகம்' 187ஆம் மைல் கல், மீசாலை. (39771)


# வடமராட்சி, மன்னாரில் விரைவில் புதிய இராணுவ நடவடிக்கைகளாம்

கொழும்பு, ஜன. 3

வடமராட்சி மற்றும் மன்னாரில் புதிய இராணுவ நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கபடும்.

''த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளை எந்தவித இடைநிறுத்தமும் இன்றி தொடர்வது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஆனால் வடக்கு — கிழக்கில் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் விமானப்படை மற்றும் கடற்படையை பலப்படுத்த அரசு தீர்மானித்திருக்கின்றது.

இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட ஐந்து யுத்த விமானங்கள் இரண்டு வாரங்களுக்குள் நாட்டுக்குள் வந்து சேர விருக்கின்றன.

— இவ்வாறு அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## மட்டுநகரில் 8 ஆண்டுகளில் 88 ஆயிரம் வீடுகள் சேதம்

மட்டக்களப்பு, ஜன. 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த எட்டு வருட காலத்தில் வன்செயல்களால் 88 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊடாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்1989 ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை இந்த உதவித்திட்டத்தின் கீழ் 16 ஆயிரத்து 400 வீடுகள் திருத்தப்பட்டன. (இ-3)

## வவுனியாவில் இளைஞனின் சடலம்

வவுனியா, ஜன. 3

விடுதலைப் புலிகளின் உறுப்பினராகவிருந்து விலகி இருந்த ஒருவர் வவுனியா வைரவ புளியங்குளம் வீதியில் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் இறந்து கிடந்தார் என தெரிவிக்கப்பட்டது.

வவுனியா செக்கடிபிலவைச் சேர்ந்த இராசையா கதர்சன் (21 வயது) என்ற இளைஞனே இறந்தவர் ஆவார்.

1993இல் இவர் விடுதலைப் புலிகளில் இருந்து விலகி வவுனியாவில் தங்கியிருந்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)


## YOGI HOME SCIENCE ACADEMY

(யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி)

★ மேலைத்தேய ஐசிங் அலங்கார வகுப்புகள் (Fondant Icing Classes)

★ அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரமும் (Basic Make-Up and Hair Dressing)

மேல் குறிப்பிட்ட குறுகியகால பயிற்சி நெறிகளை இடை நிறுத்திய மாணவிகளும் புதிதாக சேர விரும்பும் மாணவிகளும் 05-01-96 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் வகுப்புக்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

M.ஜெகதீஸ்வரன்

19, மகளிர் கல்லூரி வீதி,
(இந்திரன் வீதி)
சாவகச்சேரி. (39895)

## ''TINY TOTIS CORNER''

''ரைனி ரொட்ஸ் கோணர்''

முன்பள்ளி பாலர் கல்விக்கூடம்

எமது கல்விக்கூடம் இன்று புதன்கிழமை 03-01-1996 முதல் கீழ் உள்ள புதிய முகவரியில் இயங்கும்.

இயக்குநர்

அசெம்ளி ஒப் கோட் தேவசபை
சாவகச்சேரி,
(உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகே)
39898)


## 19 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலிகள்

15-12-1995 அன்று காலமான சாந்தியக உளவளத் துணை நிலைய அங்கத்தவரும், எமது அன்பு நண்பருமாகிய

**டாக்டர் ஆறுமுகம் சசிகாந்தன்**

அவர்களின் மறைவினை நினைவு கூர்ந்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

சாந்தியக நண்பர்கள்

(39768)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மந்துவிலைச் சேர்ந்த சாவகச்சேரி நகர, கிராம அலுவலராக கடமை புரியும்.

திரு வை. இராசரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தையாரான

அமரர்

**இளையதம்பி வைத்திலிங்கம்**

அவர்கள்

04-12-1995 ஆம் திகதி சிவபதமடைந்தமையிட்டு எமது அஞ்சலியை அன்னாரின் குடும்பத்துக்கு தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் பிராத்திக்கின்றோம்.

பிரதேச செயலக
ஊழியர் நலன்புரி சங்கம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
01-01-1996 (சி/3004)


## தளபாடங்கள் தேவை

பாவித்த அலுவலக மேசைகள், கதிரைகள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் அவற்றின் அளவு மற்றும் விவரங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு சமீபமாக)
சரசாலை.

## தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளை அவசரமாகச் செய்ய வேண்டுமா?

சிரமப் படாதீர்கள்.

குறித்த நேரத்தில், சிறந்த முறையில் அவ்வேலைகளை நாம் செய்து தருவோம்.

★ றோணியோ தட்டச்சு வேலைகளையும் நாம் பொறுப்பேற்கிறோம்.

**உதயன்**
**கிளை நிலையம்**
**சாவகச்சேரி**

இல 9, மேல்மாடி,
நவீன சந்தை, சாவகச்சேரி.

## விடுதலையின் வேளை தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள்

பாவம், சாபம், வியாதி ஆகியவற்றிலிருந்து தெய்வீக சுகம்பெற

1996 ஜனவரி 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில்

அசெம்பிளி ஒப் கோட். சாவகச்சேரி.

[மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி அருகில்]

மாலை 4-00 மணிக்கு நடைபெறும்

யாவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

(39899)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியையான திருமதி இ. அழகரத்தினத்தின் தந்தையார்

**கனகரத்தினம் இரத்தினசிங்கம்**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமும் அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், மழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அ. பி. சங்கம்.

யா/இந்து ஆரம்ப பாடசாலை,
யாழ்ப்பாணம். (39897)

## கட்டாக்காலி ஆடு, மாடுகளை பிடிக்க பணிப்பு

கைதடி ஜன. 3

வயல் நிலங்களில் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடித்து தன்னிடம் ஒப்படைக்கும் படி கைதடி கமநலச் சேவை நிலையம் விவசாயிகளைக் கோரி உள்ளது.

விவசாயிகளுக்கு விதை தானியங்களை மாலிய விலையில் வழங்கவும் அது நடவடிக்கை எடுத்துள்ளது. (இ- 154)

## மருத்துவ தாதியருக்கு பயிற்சி நெறி

கொழும்பு, ஜன.3

மருத்துவத் தாதியருக்கான பட்டபடிப்பு பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்படும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் இந்தப் பயிற்சி நெறியை நடத்தும். சுகாதார அமைச்சர் எம். எச். எம். பௌஸி கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

தாதியாரின் தொழிற்துறை அறிவை விருத்தி செய்வதற்காகவே இந்தப் புதிய பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும்—

ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியதிசாலையில் மருத்துவதாதிமாருக்கு செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும் என்றும் — அமைச்சர் மேலும் கூறினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அந்த அதிசய மருந்து என்ன?

★ இன்னும் ஒரு சில தினங்களில் மலரப் போகும் தைப்பொங்கலுடன், ஒரு புதிய யுகத்திற்கான அடித்தளத்தை இடமுடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

★ யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாகத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்குக் கிடையாது. அந்தப் பகுதியில் கூடிய விரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதும், அந்த நிர்வாகத்தை தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதும் தான் எனது நோக்கமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்த புத்தாண்டுச் செய்தியில் கவனத்தில் கொள்ளக் கூடிய இரண்டு அம்சங்கள் இவை.

தைப்பொங்கலுடன் அப்படி என்ன புதுமையை அவர் செய்யப்போகிறார்? திருப்பத்தைக் கொண்டு வரப் போகிறார்?

இனப் பிரச்சினைக்கான தனது யோசனையை உத்தியோக பூர்வமாக அரசின் திட்டமாக அறிவித்து —

அதனை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பரிசீலனைக்காக சமர்ப்பிப்பது.

அல்லது —

யாழ்ப்பாணத்தின் நிர்வாகப் பொறுப்பை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளிடம் தற்காலிகமாகக் கையளித்து, வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை திருப்பி அழைப்பதற்கு முயற்சிப்பது.

அரை நூற்றாண்டு காலமாக நாட்டை வருத்தும் இனப்பிரச்சினைக்கு, சந்திரிகா கண்டுபிடித்துள்ள — தயாரித்துள்ள — திடீர் நிவராணி அனேகமாக மேற்கூறிய இரண்டில் ஒன்றாகத்தான் இருக்குமோ?...!

இராணுவம் உள்ளவரை தமிழ் மக்கள் வலிகாமத்துக்குத் திரும்பிச் செல்லமாட்டார்கள் என்பதனை ஜனாதிபதி உணர்ந்திருக்க வேண்டும்.

ஆகையால் தற்காலிகமாக — சொற்ப காலத்துக்கு — இராணுவத்தை அமுக்கி வாசிக்கச் செய்து — தனது கையாட்களாக விளங்கும் தமிழ்க் கட்சிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தால் —

வலிகாமம் மக்களை அவர்களது பகுதிக்குக் கவர்ந்திழுக்க முடியும் என்று சந்திரிகா நம்புகிறார் போலும்!

தான் சமர்ப்பிக்கவுள்ள தீர்வுத் திட்டத்தில் சாதகமாகச் சில அம்சங்களைச் சேர்ப்பதாக இப்போதைக்குக் கூறி—

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளை விலைக்கு வாங்குவது ஒன்றும் பெரிய காரியமல்ல என்றும் சந்திரிகா எண்ணியிருக்கக் கூடும்.

அவ்வாறு செய்யும் பட்சத்திலும், யாழ்ப்பாணத்தின் ஆட்சிக் கயிறை சந்திரிகாவே வைத்திருப்பார். ஆட்சி வேறு; நிர்வாகம் வேறு என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு செய்வதாயின் மேலும் பல நெருக்கடிகள் சிக்கல்கள் தோன்றுமே அன்றி புதிய யுகத்திற்கு சந்திரிகாவால் அடித்தளம் அமைக்க முடியாது.

சந்திரிகா தமது தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்து விடுவதாயினும் அதன் மூலம் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது.

தைப்பொங்கலோடு அவர் தரப்போகும் அதிர்ச்சி வைத்தியம், அதிசய மருந்து வேறு எதுவும் உண்டா என்பதனை இரண்டு வாரங்களுக்குப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# யாழ். நகர் திரும்ப அரச ஊழியருக்கு நாம் காலக்கெடு விதிக்கவில்லை

## செயலணிக் குழுவின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 3

இடம் பெயர்ந்து சென்றுள்ள யாழ். அரச அதிபர் உட்பட சகல அரச ஊழியர்களையும் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புமாறு நாம் அவர்களுக்கு செய்தி விடுத்துள்ளோம். ஆனால் அவர்களுக்கு நாம் காலகெடு எதனையும் விதிக்கவில்லை.

வடபிராந்தியபுனர்வாழ்வு, புனரமைப்புக்கான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ். எம். ஜே. சேனரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பிராந்திய புனரமைப்பு நடவடிக்னககளுக்குப் பொறுப்பான செயலணிக்குழுத் தலைவரும் வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவுடன் கடந்த 28 ஆம் திகதி இவர் யாழ்ப்பாணம் சென்று திரும்பி இருந்தார்.

ஏற்கனவே கஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கும் அரச ஊழியர்களுக்கு மேலும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே நாம் அரச ஊழியர்களுக்கு காலக்கெடு விதிக்கவில்லை.

காலக்கெடு விதித்து உத்தரவுபிறப்பிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் அந்த குறிப்பிட்ட காலத்துக்குள் கடமைக்குத் திரும்பிவிட வேண்டும். அதன் பின்பும் கடமைக்கு திரும்பாவிட்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் அதனாலேயே நாம் காலக்கெடு விதிக்கவில்லை. என்றும் சேனரத்தின கூறினார். (இ)

## கதிர்காமருக்கு கிடைத்த 'கௌரவம்'

கொழும்பு, ஜன. 3

1995 ஆம் ஆண்டின் சிறந்த இலங்கையராக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை ''லங்கா மற்லி டைஜஸ்ற்'' என்ற ஆங்கில சஞ்சிகை தெரிவு செய்துள்ளது.

இந்த கௌரவம் எதற்கு என்று தெரியுமா?

புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்ற சிந்தனையை தகர்த்ததுக்காகவாம்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (இ)

## தனங்கிளப்பில் கசிப்பு உற்பத்தி

தென்மராட்சி, ஜன. 3

தனங்கிளப்பு அறுகுவெளியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்த நபர் ஒருவர் சாவகச்சேரி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

காவல்துறையினர் சந்தேக நபரைக் கைது செய்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட 65 லீற்றர் கோடா உற்பத்திச் சாதனங்கள், கசிப்பு ஆகியவற்றையும் கைப்பற்றினர். (இ-117)

# பிரதேச செயலகம் வரும் மக்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை

தென்மராட்சி, ஜன. 3

யாழ். மாவட்டத்திலுள்ள பத்து பிரதேச செயலகங்களின் பணிகள் தென்மராட்சி பிரதேச சபை ஊழியர்களால் மட்டும் மேற் கொள்ளப்படுவதால் பிரதேச செயலகத்துக்கு வரும் மக்கள்பல மணி நேரம் 'தவம்' கிடக்கவேண்டி உள்ளதாம்.

தென்மராட்சி பிரதேசத்தில் ஐந்து வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் நிவாரணப் பணிகளை மட்டும் வலய அலுவலகங்கள் செய்வதால் ஏனைய கடமைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இடம் பெயர்ந்த சான்றிதழ், திருமணமாகாதோர் சான்றிதழ் உட்பட பல சான்றிதழ்கள் மக்களுக்கு தேவைப்படும் தற்போதைய காலகட்டத்தில் இரண்டு தட்டெழுத்தாளர்களே பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்றனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

## பகுதி நேரவிரிவுரையாளர் சம்பளம் இன்றி அவதி

### கட்டு நிதி வரவில்லையாம்

மட்டுவில், ஜன. 3

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி கொக்குவிலில் இயங்கியபோது அங்கு பகுதி நேர விரிவுரையாளர்களாக கடமையாற்றியவர்களுக்கு கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கி வரும் யாழ். தொழில் நுட்பகல்லூரியின் அலுவலகத்திற்கு சென்று தங்களது வேதனம் பற்றி கேட்டு வருகின்றனர்.

கொழும்பிலிருந்து கட்டு நிதி வராததால் இவர்களுக்கான வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. (இ-135)

## கிளிநொச்சியில் வீதி ஒழுங்கு

வன்னிக்கு பெருமளவில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதையடுத்து கிளிநொச்சி போன்ற நகரங்களில் போக்குவரத்து நெரிசல் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவே கிளிநொச்சி வீதிகளில் ஒழுங்குகளைப் பேணுமாறு தமிழீழ காவல்துறை மக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மக்களின் இடம்பெயர்வால் கிளிநொச்சி போன்ற நகரங்களில் மக்கள் நடமாட்டம், வாகனப்போக்குவரத்து என்பன அதிகரித்துள்ளன.

இதனால் பலவீதி விபத்துக்கள் தினமும் நிகழ்வது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் கீழ் கண்ட நடைமுறைகளை கடைப்பிடிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்:-

★ இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதைத் தவிர்க்கவும்.

பிரதான வீதிகளில் சைக்கிள்களுடன் கூட்டம் கூட்டமாக நிற்பதைத் தவிர்த்து ஏனைய பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படாமல் நடவுங்கள்.

★ பிரதான வீதிகளில் வாகனங்களை நிறுத்த வேண்டாம்.

★ பிரேக் இல்லாத சைக்கிள்களின் பாவனையைத் தவிர்க்கவும். (உ-3)

# அடுத்த இராணுவத் தளபதி யார்? அரச உயர்மட்டத்தில் குழப்பநிலை

## யாழ்ப்பாணத்தை பிடித்த தளுவத்தைக்குக் கிடைக்குமா?

கொழும்பு, ஜன. 3

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவின் சேவைக்காலம் கடந்த டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

ஆனால் அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டதா அல்லது இல்லையா எபன்து குறித்து இதுவரை அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. அடுத்த இராணுவத் தளபதி யார் என்பது குறித்து குழப்ப நிலை நிலவுவதே இதற்குக் காரணம் என மூத்த இராணுவப் பேச்சாளர் ஒருவரை ஆதாரம் காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

கடந்த வருடம் மே மாதம் 28ஆம் திகதியுடன் ஓய்வு பெறவிருந்த ஜெரி டி சில்வாவின் சேவைக்காலம் கடந்த டிசம்பர் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தது.

எனினும் இவரின் சேவைக் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பது பற்றி இதுவரை முடிவு எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

உத்தியோகப்பற்றற்ற இராணுவத் தகவல்களின்படி, தனது சேவைக் காலத்தை நீடிக்கும்படி ஜெரி டி. சில்வா விண்ணப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த வேண்டுகோள் குறித்து அரசு தீர்மானமொன்றுக்கு வர முடியாத நிலையில் இருந்து வருகிறது.

இருப்பினும் அவருக்கு ஒரு மாதத்திற்கு மாத்திரம் சேவைக்கால நீடிப்பை வழங்க வாய்ப்புகள் உண்டு என்று நம்பப்படுகிறது.

ஜெரி டி சில்வாவின் சேவைக்காலத்தை மேலும் 6 மாதகாலத்தால் நீடிப்பின் தற்போதைய பிரதம தளபதியும், வடக்குக் கிழக்கு ஒன்றிணைந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகப் பணிபுரிபவருமான மேஜர் ஜெனரல் தளுவத்தைக்கு இராணுவத்தளபதி பதவியை வழங்கும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

இவ்வாண்டு மே மாதம் மேஜர் ஜெனரல் தளுவத்தை 55 வயதைப் பூர்த்தி செய்கிறார் 55 வயதைப் பூர்த்தி செய்யுமுன்னர் லெப். ஜெனரலாகப் பதவி உயர்வையும் இராணுவத் தளபதிப் பதவியையும் பெறாவிடின் தளுவத்தை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற நேரிடும்.

ஜெரிடிசில்வாவின் சேவைக் காலம் மேலும் நீடிக்கப்படுமாயின் மேஜர் ஜெனரல் தளுவத்த மாத்திரமின்றிப் பிரதிப் பிரதம தளபதியான மேஜர் ஜெனரல் ஏ.எம்.யு. செனிவிரத்தினாவும் ஓய்வு பெற நேரிடும்.

இவ்வாறான சூழ்நிலையில் மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியாவிற்கு அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

ஏதாவது ஒரு காரணத்தினால் மேஜர் ஜெனரல் தளுவத்தைக்கு இராணுவத் தளபதி பதவி கிட்டாதுவிடின் அது இராணுவ வட்டாரங்களில் கடும் மனக் கசப்பை ஏற்படுத்துமென்பதே இராணுவத்தினர் பலரின் கருத்தாகும்.

அதுபோலவே அவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கத்திற்கும் பல அசௌகரியங்கள் ஏற்படலாம் எனவும் கூறப்படுகிறது.

### இடமாற்றங்கள் ஒத்திவைப்பு

இதற்கிடையில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரவிருந்த இராணுவ உயரதிகாரிகள் பலரின் இடமாற்றங்கள் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இராணுவச் செயலர் பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடியை குருவிட்டவிலுள்ள 11 வது படைப் பிரிவின் தளபதியாக்கி இராணுவச் செயலர் பதவிக்கு பிரிகேடியர் அன்டன் விஜேந்திராவை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாற்றங்களும் மேலிடத்துஉத்தரவுகளையடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து சேவை நீடிப்பு வழங்கப்பட்ட பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் சேவை நீடிப்பை ரத்துச் செய்வது தொடர்பாகவும் — சுய தகுதிகள் எத்தகையாயினும் மூப்புரிமையின் அடிப்படையில் மாத்திரமே பாதுகாப்புத்துறை அதிகாரிகாரிகளுக்குப் பதவி உயர்வுகளை வழங்குவது தொடர்பாகவும் — அரசு ஆராய்ந்து வருவதாக ''சண்டேலீடர்'' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் தெரிவிக்கிறார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பித்துரை செல்லம்

குப்பிழான் தெற்கைச் சேர்ந்த திருமதி தம்பித்துரை செல்லம் 31 - 12 - 95 ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பித்துரையின் மனைவியும், சத்தியவதனி, சிவசோதி (லண்டன்), காலஞ்சென்ற நவசோதி, சிவானந்தன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), தருமவதனி (லண்டன்), ரூபவதனி (சுவிஸ்), வரதசோதி (லண்டன்), சிவநேசன் (லண்டன்), கேதீஸ்வரன் (யூனியன் கல்லூரி மாணவன்), ஞானவதனி (வயாவிளான் ம. ம. வித்தியாலய மாணவி), ஆகியோரின் தாயாரும், நவரத்தினராஜா (கப்பூர்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), சிவநேசன் (சுவிஸ்), முகுந்தினி (லண்டன்), அனுஷா (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், பிரகாஷ் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவன்), நிருஷா, யதுர்ஷன், சனந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் 31 - 12 - 95 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5 மணியளவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. நவரத்தினராஜா (கப்பூர்)
(மருமகன்)

தற்போதைய முகவரி:
கனகம்புளியடி – பருத்தித்துறை வீதி,
கப்புதூ,
கரவெட்டி.

(39778)

## வேலுப்பிள்ளை கதிர்காமலிங்கம்

புலோலி 1 ஆம் கட்டையைச் சேர்ந்தவரும், முன்னாள் புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவரும், முன்னாள் நீதிமன்ற ஊழியருமான திரு. வேலுப்பிள்ளை கதிர்காமலிங்கம் கடந்த 26-12-95 இல் இந்தியாவில் காலமானார்.

அவரின் ஈமக்கிரியைகள் சென்னையில் 27-12-95 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவவல்:
க. புவனேஸ்வரி
)மனைவி)

நயினாவத்தை,
புலோலி தெற்கு,
புலோலி.

(39780)

## கணபதிப்பிள்ளை தியாகராசா

காரைநகர், வாரிவளவு (மாவடி) கணபதிப்பிள்ளை தியாகராசா 5-12-95 இல் காலமானார். அன்னார் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கலைச்செல்வியின் தந்தையும், அன்பழகனின் மாமனாரும், சியாமளா, ஜெயராசா ஆகியோரின் பேரனாருமாவார். இறுதிக் கிரியைகள் 6-12-95 இல் காரைநகர் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

தகவல்:
சி. நடராசா
(சம்பந்தி)

தற்காலிக முகவரி:
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(39775)

## வல்லிபுரம் வேலுப்பிள்ளை

பெரியவிளானை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்போது எழுதுமட்டுவாளில் வசித்தவருமான வல்லிபுரம் வேலுப்பிள்ளை 02- 01- 1996 அன்று காலமாகிவிட்டார்

அன்னார் செல்வநாயகியின் அன்புக்கணவரும், வல்லிபுரம் — தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், வைத்திலிங்கம் — லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சிவமலர் (எழுதுவினைஞர், கூட்டுறவுத் திணைக்களம், திருகோணமலை), சிவநேசன், கைலேஸ்வரன் (கணக்காளர், பிரதேசசெயலகம், சங்கானை), சறோஜா (சுவிஸ்), கைலேஸ்வரி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), கருணாநிதி (சுவிஸ்), தயாநிதி (தட்டெழுத்தாளர், கூட்டுறவுத் திணைக்களம், திருகோணமலை), குகனேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், இராஜேஸ்வரி, நடேசபிள்ளை [சுவிஸ்], ரூபகாந்தன் [சுவிஸ்] ஆகியோரின் மாமனும் சுறாஜ், சுமித்தா, நித்திலா, சுலக்ஷி, அபிரூபன், நர்மதன் [சுவிஸ்], நதீப் [சுவிஸ்], ஜனனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தங்கம்மா, பாக்கியம், இரத்தினம், தம்பியையா, காலஞ்சென்ற தியாகராஜா, கண்மணி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எழுதுமட்டுவாள் இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. கைலேஸ்வரன்
(கணக்காளர்)
[மகன்]

பாடசாலை வீதி,
எழுதுமட்டுவாள்.

(39781)

## வீரச்சாவு

சாவகச்சேரி, ஜன. 3

கடந்த திங்கட்கிழமை காட்டுப் புளியங்குளம் பொலிஸ் காவலரண் தகர்ப்பில் வீரவேங்கை சாந்தன் (இராஜசிங்கம் இராஜேந்திரன், நீர்வேலி தெற்கு, நீர்வேலி) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவரது பெற்றோர் அல்லது உறவினர் மீசாலை தென்மராட்சிக் கோட்ட மாவீரர் பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளரால் கோரப்பட்டுள்ளது. (இ)

## திட்ட பணிப்பாளராக நியமனம்

சாவகச்சேரி, ஜன. 3

யாழ். செயலக புனர்வாழ்வுப்பிரிவு செய் திட்டப்பணிப்பாளராக திரு. எஸ். பாலகிருஷ்ணன் முதலாம் திகதி பதவியேற்றுள்ளார்.

இவர் செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றி வந்தார்.

(இ-3)

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சி கடந்த சில வாரங்களாக கொழும்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நேற்று முதல் அவை மிகவும் தீவிரமாக இருந்ததாக அவதானிகள் தெரிவித்தனர். (இ)

### நல்லூர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு போர்த்துக்கீசர் வந்தபோது தென்மேற்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் இருந்த பௌத்த கோவில்கள் அனைத்தையும் அழித்தனர். யாழ். குடாநாட்டிலிருந்த கோயில்களும் இத்தகைய நாசகாரச் செயலுக்கு இலக்காகின.

தற்போது நல்லூரில் உள்ள கோயிலுக்கு போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னர் சரித்திரம் ஏதும் இல்லை என்பதே எனது அபிப்பிராயம். போர்த்துகீசரால் அழிக்கப்பட்ட பௌத்த வணக்கதலம் ஒன்றின் மீது கட்டப்பட்ட நினைவுச் சின்னமே அது.

இந்தக் கோயிலின் பழமை சரித்திர காலத்துக்கு முற்பட்டது என புராணக் கதைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் கூறலாம். வழக்கமாக ஸ்ரீலங்காவில் உள்ள அனைத்து இந்துக் கோயில்களும் இத்தகைய மரபுவழிக் கதைகளைக் கொண்டிருக்கின்றன. போலியான இத்தகைய கதைகளை எவரும் வழிகாட்டுபவையாகக் கொள்ளக்கூடாது.

''நல்ல ஊர்'' என்பதே நல்லூர் என்று வந்ததாக அந்தப் பெயருக்கு இப்போது கூறப்படும் விளக்கம் நியாயப்படுத்தக் கூடியதல்ல. ''நலோமா'' (Unnaloma) என்ற பாளி பெயரிலிருந்தே அதுவந்துள்ளது.

நாகதீபவில் ராஜட்டனசத்தியவில் அக்கபோ மி மன்னனால் கட்டப்பட்டதே ''நலோமா கார'' (Unnaloma—ghara''—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### புலிகளின்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து இறக்கப்பட்டனவா என்பது குறித்தும் —

தற்போது இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் இந்திய விசேட புலனாய்வுப் பிரிவுகளின் அறிக்கையை ஸ்ரீலங்கா அதிகாரிகள் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிகின்றது.

இவ்வாறு [illegible] பத்திரிகை தெரிவித்தது.

(உ)

# மரண அறிவித்தல்கள்

## சேனாதிராஜா பொன்னம்பலம்

(நயினாதீவு)

நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சேனாதிராஜா பொன்னம்பலம் 02 - 01 – 1996 இல் முன்னேஸ்வரம் சிலாபத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும், செல்வராணியின் (முன்னேஸ்வரம்) அன்புக் கணவரும், அருண், பூவிழி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பூமகள்(இளைப்பாறிய ஆசிரியை - கொழும்பு), தங்கம் (நயினாதீவு), இலெட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, இந்தியா), Dr. மீனாட்சி (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி), நாகம்மா (உதவித் திட்ட மிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சொர்ணம்மா (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), இராமநாதன் (மாமா, K. R. N. என்ரபிறைஸ், 750, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு), ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி(கனடா), நடராஜா (K.R.N.கொழும்பு), காலஞ்சென்ற சிவபாதம், தியாகராஜா (இந்தியா), Dr. சின்னத்தம்பி, K.K. சந்திரன் (செயலகம், யாழ்ப்பாணம்), மகேஸ்வரநாதன் (மின் முகாரி, சிமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை), சந்திரலீலா, சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03- 01- 96 மாலை 4. 00 மணியளவில் முன்னேஸ்வரம், சிலாபத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
சே. இராமநாதன்
[சகோதரர்]
(மாமா-வீடியோ பிரசாத்)

C/o Dr. N. சின்னத்தம்பி,
'சிதம்பரம்'
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(39783)

## திருமதி பொன்னு சின்னையா

வதிரியை பிறப்பிடமாகக் கொண்டவரும், 20, முதலியார் வீதி, நல்லூர் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பொன்னு சின்னையா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்து சின்னையாவின் மனைவியும், காலஞ்சென்ற பார்வதியின் சகோதரியும், தங்கம்மா, காலஞ்சென்ற செல்லம்மா, இராசம்மா, கனகம்மா, தையல்நாயகி, திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-1-96) பிற்பகல் 4 மணிக்கு பற்பை வளவு, வதிரி. கரவெட்டியில் நடைபெற்று வதிரி ஆளங்கட்டையில் தகனக்கிரியை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெள்ளியம்பலம்
(மகன்)

தற்போதைய முகவரி:
''பற்பை வளவு''
வதிரி, கரவெட்டி.

(39782)

## நாகமுத்து வைத்திலிங்கம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போழுது சோலைநகர் புதுமுறிப்பில் வசிப்பவருமான இளைப்பாறிய ஆசிரியர் திரு. நாகமுத்து வைத்திலிங்கம் 27- 12- 95 இல் காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும் கைலைநாதன் (கூட்டுறவுப்பரிசோதகர்), பாலச்சந்திரன் (முத்தையன்கட்டு), பாலேந்திரன் (சோலைநகர்), கலாவதி (சுவிஸ்), லலிதா (வைத்திய கலாநிதி யாழ். போதனா வைத்தியசாலை), கமலராணி (ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, பத்மலோஜினி, சறோஜினி தேவி, ராதாகிருஷ்ணன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், நர்மதா, மதனரூபன், சுவேதா, தேனுஜா, சிந்துஜா, புவிவர்மன, பரதன், பூஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சோலைநகர் கிளிநொச்சியில் 28- 12- 95 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. லலிதா
(மகள்)

(39777)

## திருமதி கார்த்திகேசு இராசம்மா

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு இராசம்மா அவர்கள் 02 - 01 - 96 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை, நடராஜா, திருமதி நித்தியானந்தம் ஆகியோரின் தாயாரும், சகுந்தலா தேவி, நித்தியானந்தம் (யா/ ஆனைக்கோட்டை அ. மி. த க. பாடசாலை), கமலேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார். இறுதிக் கிரியைகள் நேற்று உசனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. நித்தியானந்தம் (ஆசிரியர்),
கா. நடராசா

தற்போதைய முகவரி:-
உசன் கந்தசாமி கோவில் முன்பாக,
மிருசுவில்.

(39779)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் [illegible] அவர்களது தற்காலிகப் பணிமனையில் 03-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org